Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*



பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

# The Life of the Female Friend in *Kalithogai*

**Dr. K. S. Jaya Shree**, Assistant Professor in Tamil, Lekshmipuram College Arts & Science
Neyoor, Kanniyakumari District,Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0008-2501-7753
**DOI: 10.5281/zenodo.14752809**

## Abstract

*There are many old traditions found in Sangam literature. In Sangam literature, love is the state where the minds of the hero and the heroine who fall in love are united. The one who supports the love of the leader and the beloved is the female friend. The Agam tradition calls the female friend 'Nannar Makkal'. The female friend plays a special role in the life of the beloved. She acts as a medium between the leader and the beloved. She helps the beloved in her love life. No other information is known about the birth, marriage, or life of the female friend. She is seen as a character created for the leader and the success of the beloved's love. She cares for the beloved very keenly from her childhood. Sangam literature is mostly internal in meaning. It surpasses time. The hero who is saddened by the separation will come quickly to the heroine and soothe her worries. The female character called the friend is the one who takes care of the heroine's welfare in all walks of her life. This study shows through the information of the female friend how she helps the beloved to get a safe heart at times of turbulence.*

**Keywords:** Sanga Ilakkiyam, Kalithogai, Kathal, Thalaivan, Thalaivi, Thozhi, Sevili, Nattai

## References

[1] Dasan, M. *Tolkappiya Kalanjiyam Porulattathikaram.* Abila Publishing House, Melappottakkuzhi, Teruvukkade Mail, Kumari District- 629 157, 2011
[2] Puliyurkesigan. *Kalithogai.* Jeeva Publishing House, Chepauk, Chennai – 600005, 2012.
[3] Puliyurkesigan. *Thirukkural.* Poombukhar Publishing House, Chennai- 600 008.
[4] Manavalan, A. A. *Sanga Ilakiyam.* New Century Book House, Chennai, 2009.
[5] Viswanathan, A. *Kalithogai.* New Century Book House, Chennai, 2009.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X



# கலித்தொகையில் தோழியின் வாழ்வியல்

**முனைவர் கு. ச. ஜெயஸ்ரீ**, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர், குமரி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0008-2501-7753
DOI: 10.5281/zenodo.14752809

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க இலக்கியப் பாட்டுகளில் காணப்படும் பழைய மரபுகள் பல உண்டு. சங்க இலக்கியங்களில் காதல் கொள்ளும் தலைவனும் தலைவியும் மனம் ஒத்து இணையும் நிலையே காதல் என்பர். அத்தகையவர்களின் காதலுக்குத் துணையாக நிற்பவள் தோழியாவாள். தோழியை 'நன்னர் மாக்கள்' என்று அகம் கூறுகின்றது. இலக்கியத்தில் கலித்தொகையானது 'கற்றறிந்தோர் ஏத்தும் கலி' என்று போற்றப்படுகிறது. இது முழுவதுமாக அகப்பொருளைக் கொண்ட இலக்கியமாகத் திகழ்கிறது. இது காலத்தால் பின் தங்கியது. பிரிவால் வருந்திய தலைவிக்குத் தலைவன் விரைந்து வருவான் கலங்காதே என்று, தலைவியின் நலனில் அக்கறைக் கொள்பவள் தோழி என்னும் பெண் கதாபாத்திரமே. இவள் இல்லை என்றால்,சங்க இலக்கியங்ளில் காதலுக்கு முக்கியத்தும் காணப்படாது என்பதையே தோழியின் வாழ்வியல்ச் செய்திகள் மூலம் இவ்வாய்வுக் கூறுகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** சங்க இலக்கியம், *கலித்தொகை*, தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய்.

**முன்னுரை**

தமிழின் முதல் இலக்கியமும், முதன்மையான இலக்கியமும் சங்க இலக்கியம் என்பர். குடும்ப வாழ்க்கையைச் சித்தரிக்ககக் கூடிய இலக்கியம் அகப்பொருள் இலக்கியம் அகப்பொருளில் தலைவன், தலைவி,தோழி, செவிலி, நற்றாய் முதலானோர் இடம்பெறுகின்றனர். தலைவனும், தலைவியும் செல்வ நிலையில் சிறந்தவர்களாக காணப்பட்டனர். தோழி சொல், செயல் ஆகியவற்றில் சிறந்தவளாக காணப்பட்டாள். தோழி என்பவள் தன் நிலையினைப் பெரிதும் எண்ணாதவள். தலைவியின் நிலையினையே அக்கறைக்கொண்டு இருப்பாள். சங்க இலக்கியத்தில் வரும் துணைப் பாத்திரங்களில் தோழியே தலைமைத் தாங்கும் தகுதியுடையவள். இதனையே தோழியின் பாத்திரம் வழி வாழ்வியல் நிலையே ஆராய்ந்துக் கூறப்பட்டுள்ளது.

**தோழி பெண் பாத்திர அறிமுகம்**

தோழி அக இலக்கியத்தில் சிறப்பானப் பாங்கினை வகிக்கின்றாள். அவள் தலைவன் தலைவி இருவரையும் இணைக்கும் பாலமாகச் செயல்படுகின்றாள். தலைவனின் காதல்

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X


நிலையில் அவனுக்கு உதவுகின்றாள். தோழியின் பிறப்பு, திருமணம், வாழ்க்கைக் குறித்து வேறெந்த செய்தியையும் அறியப்படவில்லை. அவள் தலைவிக்காகவே தலைவியின் காதல் வெற்றிக்காகவே படைக்கப்பட்ட பாத்திரமாகக் காணப்படுகிறாள். தலைவியின் விளையாட்டுப் பருவத்தில் இருந்து செவிலியாக மாறும் வரை தலைவிக்காகவே வாழ்கிறாள். செவிலியின் மகள் என்பதால் இவளுக்கும் திருமணம் உண்டு. தோழி என்பவள் செவிலியின் மகள் இது குறித்து தொல்காப்பியர், **"தோழி தானே செவி மகளே" (தொல்.பொருள். 123)** என்று செவிலியின் மகளாகத் தோழியைக் காட்டுகிறார். தோழி அக இலக்கிய முக்கோண வடிவத்தின் மேல் முனையாக விளங்குகிறாள். அவள் தலைவன் தலைவி என்ற இரு கரைகளை இணைக்கும் பாலமாகச் செயல்படுகிறாள். தோழியின் பின்னணி, தோழியின் இலக்கணம், தோழியின் பாத்திரச் சிறப்பு, தோழிக்குரிய மரபு பற்றி கூறப்படுகிறது.

**தோழியின் பின்னணி**

தோழியின் வாழ்வு பற்றிய செய்திகள் சங்கப்பாடலில் காணப்படவில்லை. ஆயினும் அவளுக்கும் தலைவிக்கும் உள்ள தொடர்பு முந்தைய தலைமுறையிலே ஏற்பட்டதாகும் என்பது மட்டும் தெரிகிறது. தோழியின் தாயாகிய செவிலியும், தலைவியின் தாயாகிய நற்றாயும் நெருங்கிய தோழியராய் விளங்கியவர்கள் என்பது குறிப்பாகத் தோன்றுகிறது. தோழியர் பலர் இருந்தனர் என்பதை இளம்பூரணரும், புலவர் குழந்தையும் கூறுகின்றனர்.

**தோழியின் இலக்கணம்**

தோழி தலைவியோ ஒத்த வயதுடையவள். உடன் வளர்ந்து விளையாடிப் பழகி அவளை விட்டு பிரியாதவள் உணர்வாலும் ஒத்தவள். ஒன்றித் தொன்றுந்தோழி எனத் தொல்காப்பியர் கூறுகிறார். இதன் மூலம் தோழியும், தலைவியும் தொட்டில் தொட்ட இப்பிணைப்புக் கருதி இவ்வாறு கூறியுள்ளதாக நாம் உணர முடியம். மேலும் தோழி, தானே ஆராயும் அறிவு மிக்கவள். தலைவிக்கு உயிர் போன்று இன்றியமையாதவள். தலைவிக்கு தீங்கு நேராமல் பாதுகாப்பவள். தலைவிக்கு வருத்தம் நேர்ந்த போது ஆறுதல் கூறுபவள். களவுக் காலத்திலும் தலைவியின் துணையாக இருப்பவள். தலைவனுக்கும், தலைவிக்கும் ஏற்றவிடத்தில் தன் தகுதிக்கு உட்பட்டு அறநெறி கூறுபவள். தலைவன் தலைவிக்கு இடையே ஏற்படும் ஊடலைத் தீர்க்கும் வாயிலாக இருப்பவள். தோழி என்பதை அறிய முடிகிறது. தலைவியின் இன்னொரு கண்ணாக அமைந்திருக்கிறாள். நேர்மை, கண்டிப்பு, கனிவு, அமைதி ஆகிய குணங்கள் தோழிக்கு இயல்பாக அமைந்துள்ளன.

**தோழியின் பாத்திரச் சிறப்பு**

காதலர்கள் உணர்ச்சி, மாந்தர்கள், உணர்ச்சியில் விளையும் அறப்போராட்டங்களையும் மோதல்களையும் உள்ளவாறு அறியும் அறிவுப்பாத்திரம் தோழியாவாள். வரம்பு கடந்து செல்லும் தலைவனை இடித்துரைத்தும் தனிமை தாங்காத தலைவியை ஆற்றியிருக்க அறிவுறுத்தலும் செய்யும் ஒளிவீசும் ஆசான் பாத்திரமாகத் தோழி விளங்குகிறாள்.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

அகப்பொருள் பற்றிய பாடல்களில் வரும் அகமாந்தருள் பெரும் பொறுப்புடையவள் தோழி. அவள் அறிவும், ஆற்றலும், பண்பும், திறனும் மிக்கவளாக இருந்தால் தான் தலைவனுக்கும், தலைவிக்கும் தக்க வழிகாட்டி அவர்களை நன்னெறிப்படுத்துதல் இயலும். உலகியல் தெளிவும் இருந்தால் தான் காதல் நெறியில் நேரும் இடர்பாடுகளை அறிந்து உள்ள துணையாக இருந்து வர இயலும். இத்தகையவள் தோழி என்பதை சங்கப்பாடல்கள் வழி அறிய முடிகிறது.

**தோழிக்குரிய மரபு**

**தோழியின் மரபுகளாக,**

**புலத்தலும் ஊடலும்ஆகிய இடத்துந்**

**சொல்லத்தகு கிளவி தோழிக்குரிய (தொல்.பொருள். 155)**

இதற்கு ஒப்பாக,

**அலந்தாரை யல்லல் நோய் செய்தற்றால் தம்மைப்**

**புலந்தாரைப் புல்லா விடல் (குறள்., 1303)**

என்ற வள்ளுவரின் இக்குறளை ஒப்பிடலாம். தலைவன், தலைவி இருவரும் ஊடலின் காரணமாகப் பேசாமல் இருந்தால் நன்மை விளையாது. இருவருக்கும் இடையில் ஊடல் தீர்க்க அழும் பொருட்டு தோழி செயல்படுகிறாள் என்பதை இந்நூற்பாவின் மூலம் அறியலாம்.

**தோழியின் திறன்**

தலைவியின் காதல் வாழ்வு வெற்றி பெறவும் அதை நிலைநிறுத்தவும் தன் அறிவையும் செயலாற்றலையும் கருவியாகக் கொள்கிறாள். தோழி, அதனால் தொல்காப்பியரும் அவளை அறிவுடையவளாகக் காட்டுகிறார். அவளுடைய சொல்லாற்றலால் தலைவன் தலைவி தாயார் முதலியவர்களைத் தன் சொல்வழி ஒழுகச்செய்யும் திறன் பெற்றவளாகிறாள். அவள் பேசும் சொற்களில் கேட்டார்ப் பிணிக்கும் தன்மையும் வருந்தாமல் திருத்தும் பண்பும் புலப்படும். உள்ளுரை வைத்துத் தோழி திறம்படச் செயலாற்றுபவள் என்பதனைச் சங்கப்பாடல்களில் தோழி கூற்றுக்கள் வழி அறியலாம்.

**பேச்சுத்திறம்**

தலைவன் தலைவியைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று தோழியிடம் உறுதியளிப்பதும் பின் திருமணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டு செல்வதும் ஐயத்தை உறுதியளிப்பதாக உள்ளது. இதனால் தோழி தலைவியின் இரங்கத்தக்க நிலையை எண்ணி வருந்துகிறாள். மனதில் களிப்புடன் சொல்லில் கடுமையை வெளியிடும் சொற்களைச் செங்கடுமொழி என்பர். தலைவியின் மனத்தை நல்ல நினைவுகளில் திருப்புவதற்குத் தோழி கையாண்ட அரிய உளவியல் முறை இயற் பழித்து மொழிதலாகும். சொன்ன சொல்லில் மாறுபட்டுத் தலைவன் பிரிந்தான். அதனால் தலைவி மயங்கி நிலை கலங்கினாள்,

**நெடிய மொழிதலுங் கடிய ஊர்தலும்**

**செல்வமன்று தன் செய்வினைப் பயனெனச்**

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**சொல்லுப என்ப சான்றோர் நேர்ந்தோர்**
**புன்கண் அஞ்சும் பண்பின்**
**மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே (நற். பா., 210)**

என்ற பாடலில் தலைவன் தலைவியோடு அன்போடு வாழ்வதே பெரிய செல்வமாகும் என்று தலைவனைப் பழிப்பது தலைவனுக்கு அறிவுரை கூறுவதாக உள்ளது.

**தோழியின் - சொல் விளக்கம்**

தலைவியுடன் இருந்த பெண்ணானவள் தோழி எனப்பட்டாள். 'தோழி' என்ற பெயரைச் சுட்ட இருளை, பாங்கு, சிலதி, இணங்கி, துணைவி, சேடி, சகி என்று பல்வேறு பெயர்களில் குறிப்பிடப்படுகிறது. இப்பெயர் தொல்காப்பியம், இறையனார், அகப்பொருள், வீரசோழியம் போன்ற நூல்களிலும் காணப்படுகிறது. கண் போன்றவன் கணவன், தலை போன்றவன் தலைவன், இவ்வாறே தோள் போன்ற உறுப்பினால் அமைந்ததால் 'தோழி' என்ற பெயரும் தோன்றின என்று கருதப்படுகிறது.

**தோழி - தலைவி உறவு நிலை**

தோழியானவள் தலைவனையும் தலைவியையும் காதலில் இணைப்பதும், பிரிவால் வருந்தும் போது ஆற்றுவிப்பதும் அவளது பொறுப்பு ஒவ்வொரு துறையிலும் தலைவி தோழி உறவு நிலை சிறப்பாக கூறப்படுகிறது. தோழிக்கும் - தலைவிக்கும் இடையே உள்ள அன்புநிலை, ஒருவரை ஒருவர் அழைக்கும் நிலை, இன்ப துன்பங்களில் இருவரும் பங்கு கொள்ளும் நிலையினை கலித்தொகையில்,

**பூண் அகம்நோக்கி இமையான், நயற்று, நம்**
**கேண்மை விருப்புற்றவனை, எதிர் நின்று**
**நான் அடப்பெயர்த்த நயவரவு இன்றே (கலி., 24)**

என்று தோழியானவள் தலைவியின் காதலில் உதவி செய்து உறவை வளர்க்கும் நிலையினைக் கூறப்பட்டுள்ளது.

**அகவாழ்வில் தோழி**

அக இலக்கியங்களில் தலைவியின் உணர்வுகளைப் பெற்றோரை விட, மற்றோரை விட மிகச் சிறப்பாகப் புரிந்து கொள்ளும் பாத்திரமாகத் தோழி விளங்குகிறாள். அக இலக்கியங்களில் தோழி பெறும் சிறப்பிடம் குறித்து இது விளங்குகிறது.

**கலித்தொகையில் தோழியின் நிலை**

கலித்தொகையில் தோழியானவள் தலைவியின் மகிழ்ச்சிக்காகவே வாழ்பவள். தலைவியின் முகம் மலரும் போது தான் தோழியின் இதயம் மகிழும் தலைவனையும் தோழி வாழ்த்துகின்றாள். தலைவன் வரைவு மேற்கொண்டாலும் தமர் மறுப்பரோ எனத் தலைவி அஞ்சும்போது வரைவை நினைத்து மகிழ்வதாய் கலித்தொகைப் பாடல் கூறுகின்றது.

**அவரும் தெரிகிணை நோக்கி, சிலை நோக்கி**

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

**ஒரு பகல் எல்லாம் உருத்து எழுந்து ஆறி**
**இருவர் கண் குற்றமும் இல்லையால் என்று**
**தெருமந்து சாய்த்தார் தலை (கலி., 37)**

தலைவியை தலைவனுடன் சேர்த்து வைத்தாள். தலைவனின் தந்தை வாழ்க என்று வாழ்த்துகிறாள். இவ்வாறு தனக்கெனத் தனி இன்பம் இல்லாமல் தலைவிக்கான இன்பமே தன் இன்பம் என கருதும் தோழி சிறப்பைப் பெறுகின்றாள் என்பது கலித்தொகை வாயிலாக அறிய முடிகின்றது. தலைவன் எந்த நிலையிலும் தலைவியைப் பிரிதல் கூடாது. அவ்வாறு பிரிந்து சென்றால் அவனை கடிந்து கொள்பவளாகவும் தோழி இருக்கின்றாள் என்பதை கலித்தொகைப் பாடல் கூறுகின்றது.

**அணை தரும் பண்வினான், நின்தீமை காத்தவள்**
**அருந்துயர் ஆர் அஞர் தீர்க்கும்**
**மருந்து ஆகிச் செல்கம்,பெரும்! நாம் விரைந்தே (கலி., 44)**

தலைவன் தலைவியின் பிரிவில் தலைவி வருந்துவதை தோழி தலைவனிடம் சென்று கூறி அவளை ஆற்றுவிக்க விரைந்து வர வேண்டும் எனக் கூறி ஆற்றுவிக்கின்றாள். இதனை கலித்தொகைப் பாடல்,

**எறி திரை தந்திட இழிந்த மீன் இன் துறை**
    **மறி திரை வருந்தாமல் கொண்டாங்குநெறி தாழ்ந்து**
**சாயினுள் வருந்தியாள் இடும்பை**
    **பாய் பரிக்கடுந் திண்தேர் களையினோ இடனே (கலி., 4)**

என்று கூறுகின்றது.

**தோழி செவிலி உறவு நிலை**

தலைவியின் உயிர்த்தோழியே பிறகு செவிலித் தாயாகிறாள். செவிலி தன் மகளான தோழியிடம் பாசம் காட்டுவது பற்றி கூறப்படவில்லை. தலைவியை வளர்ப்பதில் மட்டுமின்றி அவளது புதிய குடும்ப அமைப்பிலும் செவிலித்தாயும் அவளுடைய மகளாள தோழியும் முக்கிய பங்கேற்கின்றனர். அதனால் தான் தொல்காப்பியர்,

**ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்**
**தாய் எனப்படுவோள் செவிலி யாகும் (தொல்., 122)**

செவிலியின் மகள் என்பதால் அவளை போலவே தோழியும் அறிவுடையவளாக இருந்ததாக கருதப்படுகிறது. மேலும் செவிலி தோழி உறவை தலைவியின் காதல் நிலையில் தோழி செவிலியிடம் கூறி திருமணத்தை நடத்தி வைப்பதாக அமைகின்றது. இதனை,

**அறத்தொடு நின்றேனைக் கண்டு திறம்பட**
**என்னையர்க்கு உய்த்து உரைத்தாள் யாய்**
**அவரும் தெரி கணை நோக்கி சிலை நோக்கி கண்சேந்து**

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**ஒரு பகல் எல்லாம் உளுத்து எழுந்து ஆறி**
**இருவர் கண் குற்றமும் இல்லையால் என்று**
**தெரு மந்து சாய்ந்தார் தலை (கலி., 3)**

என்று கலித்தொகைப் பாடல் தோழி செவிலி உறவைக் காண்பிக்கின்றது.

**தோழியின் அறிவுத் திறன்**

தோழியின் அறிவுத்திறன் என்பது தோழியின் சொல்லாற்றல்இ உவமை, குறிப்புப் பொருளை ஆளும் சிறப்பு, பேச்சுத்திறம், வரலாற்றறிவு, உளவியல் ஆகியன தோழியின் சிறப்பைக் கூறும் விதமாக அமைகின்றன.

**தோழியின் சொல்லாற்றல்**

தலைவியின் காதல் வாழ்வு வெற்றி பெறவும் அதை நிலை நிறுத்தவும் தன் அறிவையும் சொல்லாற்றலையும் கருவியாக கொள்கிறாள் தோழி. இதனால் தொல்காப்பியரும் தோழியை அறிவுடையவளாக கூறுகின்றமைத் தெரிகிறது. **"சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற் பொலிமே" (தொல்., 124)** தோழி தன் சொல்லாற்றலால் தலைவன், தலைவி தா்யார் முதலானவர்களை தன் சொல் வழி ஒழுகச் செய்யும் திறன் பெற்றவளாக தோழி திகழ்கிறாள்.

**தோழியின் அழகு**

சங்க இலக்கியத் தோழியானவள் அறிவில் சிறந்து விளங்குவதுப் போல அழகு தன்மையிலும் சிறப்பாக விளங்குகின்றாள். கலித்தொகையில் மட்டுமே தோழியின் அழகு சிறப்பாகக் கூறப்படுகிறது. தோழியின் உருவச் சிறப்பு ஆயிழை, சேயிழை, சடரிழாய் என அணிகலத்தின் வழி கூறப்படுகிறது. தாழம்பூ அணிந்த கூந்தலை உடையவள். நீலம் போன்ற கண்ணழகும், புன்னகை போன்ற வாயழகும், தோழியின் சிறப்புக்கே உரிய பேச்சழகும், என அவளுடைய அழகு காட்டப்படுகிறது. தோளின் அழகை தலைவனும் சிறப்பித்து கூறுவதாக சொல்லப்படுகிறது.

**தலைவி தோழி தொடர்பு நெருக்கம்**

ஈருடலும் ஓர் உயிர் உயிருமாகத் தோழியும் தலைவியும் இளமையில் இருந்தே பழகுகின்றனர். தனிநிலை காதலையும் தமக்குள் பொதுவாக பேசிக் கொள்கின்றனர். தலைவிக்கு உரிய தலைவனை நம் காதலர் என்றும் தலைவின் உயிரே தன் உயிர் எனவும் உயர்த்தி பேசுகின்றாள். இருவரின் பண்பும் ஒன்றாக காணப்படுகிறது. இதனை,

**நன்று ஆகின்றால் - தோழி! நம் வள்ளையுள்**
**ஒன்றி நாம் பாட, மறை நின்று கேட்டு அருளி**
**மென்தோட் கிழவனும் வந்தனன் (கலி., 41)**

என்று கூறுகின்றது. தோழி தலைவி இருவருமே தோழி என்று அழைத்துக் கொள்கின்றனர். செவிலியும் நற்றாயை தோழி என்று அழைக்கின்றாள். இதனால் தலைவியிடத்திலும் தோழியிடத்திலும் வேறுபாடு இல்லாத நெருக்கமே காணப்பட்டது.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**தோழி பாணன் உறவு நிலை**

புறத்திணையில் கலை வல்ல பாணர்கள் போற்றப்படுகின்றனர். ஆனால் அகத்திணையில் பாணர்கள் பழிக்கப்படுகின்றனர். பாணரும் விறலியும் தலைவனை பரத்தையிடம் சேர்ப்பதனால் இவ்வாறு தாழ்வாக கருதப்படுகின்றனர். இதனால் தோழியின் தலைவியும் பாணனை வெறுக்கின்றனர். மேலும் பாணனை கள்வனாக்கியும் தோழி கூறுகின்றாள்.

**மெல்லியான் செவி முதல் மேல் வந்தான் காலை போல்**
**எல்லாம் துயிலோ எடுப்புக நின்பெண்டிர்**
**இல்லின் எழி இய யாழ் தழீஇய கல்லாவாய்**
**பாணன் புகுதராகக் கால் (கலி., 70)**

என்று *கலித்தொகை* பாடல் தலைவன் வாயில் மறுத்த நிலையை விட இந்த பாணரின் யாழ் தழுவி வருவது தான் வருத்தம் தருவதாக உள்ளது என்று தோழி கூறுகின்றாள். மேலும் தலைவன் பாணனை தூதாக விட்டதால் பழிக்கப்படவில்லை. தகுந்த காலத்தில் தலைவன் வந்து சேராததால் தலைவனை பாணனிடம் தோழி பழித்து கூறுகின்றாள். இவ்வாறு இருவருடைய உறவு நிலையும் அமைகிறது.

**தோழியின் சிறப்புகள்**

இலக்கியத்தில் தோழி மிகவும் சிறப்புடையவள். அவள் தலைவன் தலைவியர் வாழ்வின் மேன்மைக்காகச் செயல்படுகின்றாள். இலக்கியத்தை பொருத்தமட்டில் எல்லா வகையிலும் செவிலிக்கும் தோழிக்கும் தான் மிகுதியான இடங்கள் உண்டு. பிறர் துன்பம் துடைக்கும் தோழிக்கும் நெஞ்சு வேண்டும் என்றும் தோழியின் சிறப்பு கூறப்படுகிறது.

**முடிவுரை**

சங்க இலக்கியத்தில் தோழி இல்லை என்றால் காதல் நிலை அமையாது. தோழி இல்லையேல் தலைவியின் காதல் பாங்கன் கூட்டத்துடன் முடிந்துவிடும். தோழி தான் தலைவியின் காதல் அரும்பை மலர்வித்து கனிவிக்கிறாள். தோழியே அடி மண்ணாக இருந்து பிறர் அறியாமல் செயல்படுகிறாள் தலைவியின் வாழ்வில் தோழியின் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது. காதலைப் பற்றிக் கூறாத பாடல்களை இல்லை. எனவே மக்களின் வாழ்வைப் பற்றி அறியும் விதமாகவும் இந்த தோழியின் நிலை அமைகின்றது. கலித்தொகை தோழியே இவற்றில் சிறப்பான இடத்தையும் பெறும் விதமாக இவ்வாய்வு அமைகின்றது.

**குறிப்புகள்**

[1] தாசன், மு. *தொல்காப்பிய களஞ்சியம் பொருளதிகாரம்.* அபிலா பதிப்பகம், மேலப் பொட்டக் குழி, தெருவுக்கடை அஞ்சல், குமரி மாவட்டம்- 629 157, 2011.
[2] புலியூர்க்கேசிகன். *கலித்தொகை.* ஜீவா பதிப்பகம், சென்னை – 600005, 2012.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

[3] புலியூர்க்கேசிகன். *திருக்குறள்.* பூம்புகார் பதிப்பகம், சென்னை-600 008.
[4] மணவாளன், அ. அ. *சங்க இலக்கியம்.* நியூ செஞ்சுரி ஹவுஸ், சென்னை - 600008, 2009.
[5] விசுவநாதன், அ. *கலித்தொகை* நியூ செஞ்சுரி ஹவுஸ், சென்னை- 600098, 2009.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.